நகரமன்றம் குடியாத்தம் நாள் : 03.07.2018

# அறிவிப்பு

2018–ம் ஆண்டு ஜுலை மாதம் 3–ம் தேதி புதன் கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

1. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN23 AU 1182-க்கு தகுதி சான்று பெறும் பொருட்டு பழுதுக்கள் சரி செய்ய 25.06.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | வாலாஜாபேட் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் நிறுவனம், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் சோளிங்கர், தீது தெரு, வாலாஜாபேட் | ரு.87472/- |
| 2. | திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம், ஆசிரியர் நகர், திருப்பத்தூர் | ரு.88059/- |
| 3. | காட்பாடி அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம், வேலூர் ரோடு, காட்பாடி. | ரு.87904/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 வாலாஜாபேட் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் என்ற நிறுவனத்தின் குறைந்தபட்ச விலைப்புள்ளியை ஏற்று உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்திரவிட்டதை அனுமதிக்கலாம். (ந.க.எண்.48/2016/எச்1)

2. இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் தனி கீழ் திடக்கழிவு மேலாண்மை வீதிகள் 2016 அமல்படுத்தவும் மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை தரம் பிரித்தல் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் 20000 எண்ணிக்கை நோட்டீஸ் அச்சடிக்க 25.06.2018 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | நோட்டீஸ் அச்சடிக்கும் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | வடமலை ஆப்செட் பிரிண்டர்ஸ், நெ.7, ராஜேந்திரசிங் தெரு, சுண்ணாம்புபேட்டை, குடியாத்தம் | 20000 எண்ணிக்கை | ரு.39600/- |
| 2. | குகன் ஆப்செட் பிரிண்டர்ஸ், நெ.136, சந்தப்பேட்டை, குடியாத்தம். | 20000 எண்ணிக்கை | ரு.41000/- |
| 3. | பிரிமிட் ஆப்செட் பிரிண்டர்ஸ், நெ.3, கொச அண்ணாமலை தெரு, குடியாத்தம். | 20000 எண்ணிக்கை | ரு.41500/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 வடமலை ஆப்செட் பிரிண்டர்ஸ், குடியாத்தம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட தொகையை தற்போது பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். IEC Activeties மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு பொது நிதிக்கு மேற்படி தொகை ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2050/2015/எச்1)

3. இந்நகராட்சியில் ஒப்பந்தபணிகளில் பிடித்தம் செய்து வைக்கப்படும் வைப்பு நிதியில் ஒப்பந்ததாரர்களின் விண்ணபத்தின் பேரில் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் குறிப்பின்படி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திரு.எஸ்.சிவக்குமார், ஒப்பந்ததாரர் தாம் ஒப்பந்தம் எடுத்த கீழ்க்காணும் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் செலவுப்பட்டியலில் பிடித்தம் செய்த முன்வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை கீழ்காணுமாறு பட்டியலிடப்பட்டு திரும்ப வழங்க கோரப்பட்டுள்ளது.

| நாள் | வருடம் | திட்டம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 01.10.2010 | 2010-2011 | போக்குவரத்து மேலாண்மை | 43000.00 |
| 25.10.2010 | 2010-2011 | போக்குவரத்து மேலாண்மை | 43000.00 |
| 28.01.2011 | 2010-2011 | பொது நிதி | 22900.00 |
| 14.06.2012 | 2010-2011 | பொது நிதி | 17219.00 |
| 22.08.2012 | 2010-2011 | பொது நிதி | 9600.00 |
| 09.11.2010 | 2010-2011 | சிறப்பு சாலைகள் திட்டம் | 83500.00 |
| 00.11.2010 | 2010-2011 | சிறப்பு சாலைகள் திட்டம் | 91000.00 |
| 22.08.2012 | 2010-2011 | சிறப்பு சாலைகள் திட்டம் | 250153.00 |
| 29.10.2012 | 2012-2013 | IUDM | 44250.00 |
| 29.10.2012 | 2012-2013 | IUDM | 46900.00 |
| 22.03.2013 | 2012-2013 | IUDM | 8480.00 |
| 04.06.2013 | 2012-2013 | IUDM | 9400.00 |
| 04.06.2013 | 2012-2013 | IUDM | 14600.00 |
| 10.06.2013 | 2012-2013 | IUDM | 22800.00 |
| 24.03.2014 | 2012-2013 | IUDM | 18900.00 |
| 15.04.2014 | 2012-2013 | IUDM | 18900.00 |
| 30.06.2011 | 2011-2012 | பொது நிதி | 2000.00 |
| 11.07.2011 | 2011-2012 | பொது நிதி | 1400.00 |
| 15.11.2011 | 2011-2012 | பொது நிதி | 3900.00 |
| | | **மொத்தம்** | **751902.00** |

மேற்குறிப்பிட்ட திட்ட பணிகளுக்கு தணிக்கையில் தடைபத்திகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் இருந்தது. தற்போது தணிக்கை தடை பத்திகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சிவக்குமார் அவர்களுக்கு தொகை ரூ.751902/– திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.எச்3/1460/2018)

4. இந்நகராட்சி பதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் குழு கூட்டம் நடைபெறும் தினத்தன்று குழுவில் இடம் பெற்றுள்ள அரசு அலுவலர்கள் தவிர்த்து மீதமுள்ள 19 (பத்து) நபர்களுக்கு அமர்வுபடி வழங்க தமிழ்நாடு அரசிதழ் எண்.23 பக்கம் வரிசை எண்.17–ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க ஒரு நபருக்கு ரூ.1000/– வீதம் 10 உறுப்பினர்களுக்கு ரூ.10000/– வழங்கவும் மற்றும் டீ, பிஸ்கட் ரூ.500/–ம் ஆக மொத்தம் ஒரு கூட்டத்திற்கு ரூ.10,500/– செலவு செய்ய மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மேலும் இக்கூட்டம் 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேணடும் என்பதால், ஒரு வருடத்திற்கு 4 கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். ஆதலால், ஒரு வருடத்திற்கு ரூ.42,000/–ம் செலவுசெய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2416/2016/எப்1)

**5.** குடியாத்தம் நகராட்சியின் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையில் கணக்குகளை தணிக்கை செய்ததற்காக **2016–2017** ஆம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ.**82,450/–**ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம். (ந.க.எண்.1779/2012/எப்1)

**6.** இந்நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெற இருக்கும் பணியாளர்களுக்கு, அன்னார் கணக்கில் உள்ள சிறப்பு சேமநல நிதித் தொகை, வட்டி மற்றும் நகராட்சி பங்குத்தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | தற்போது வழங்க வேண்டிய தொகை | | | |
|---|---|---|---|---|---|
| | | பங்குத் தொகை | சிறப்பு சேமநல நிதித் தொகை | வட்டி | மொத்தம் |
| 1. | திரு.சந்தான கிருஷ்ணன் மருத்துவ அலுவலர் | –– | 3554 | 414 | 3968 |
| 2. | திரு.கருணாநிதி குழாய் திருப்புனர் | 10000 | 2960 | 4916 | 17876 |
| 3. | திருமதி.நாகம்மாள் க/பெ.வெங்கடசாமி துப்புரவு பணியாளர் | 10000 | 2960 | 12710 | 25670 |
| 4. | திரு.பிரணாகரன் துப்புரவு ஆய்வாளர் | 10000 | 2960 | 6103 | 19063 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7682/2014/பி2)

7. இந்நகராட்சிக்கு சொந்தமான TN23M6975 ஈப்பு வாகனத்திற்கு M.H.D.800 Exide Battery புதியதாக வாங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.7,000/-ஐ (ரூபாய் ஏழு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்அனுமதி பெற்று " **Vellore Battery Centre, Vellore**" நிறுவனத்தின் மூலம் பேட்டரி கொள்முதல் செய்து தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

8. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள 29.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்க 2 எண்ணிக்கை Battery Operated Tricycle கொள்முதல் செய்யும் பணி<br>மதிப்பீட்டு தொகை ரூ.3,60,000/- | 1. Vambsk Fabs – 0.00% மதிப்பீட்டு விகிதம்<br>2. Sakthi Body Works – 0.60% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விகிதம் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:-** இ1/399/2017

9. குடியாத்தம் நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP2018-2019) 2018-2019-ஆண்டு திட்டத்தில் ரூ.5.00 கோடியில் நிதி ஒதுக்கீடு கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு உரிய பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டது. அதனை ஏற்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்: 27.06.2018-ம் தேதிய கடிதத்தில் TURIP2018-2019-க்கான திட்டஅனுமதி குழு நாள்:12.06.18-ன் ஒப்புதல் படி குடியாத்தம் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| நகராட்சி / மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| குடியாத்தம் | 5.00 | 1.90 | 1.50 | 1.10 | 0.50 |

மேற்கண்ட ஒதுக்கீட்டின் படி பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெற்று நிர்வாக அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-05 அவர்களுக்கு அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிதி ஒதுக்கீட்டின் படி பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மானத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி, நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை-05 அவர்களுக்கு அனுப்பவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:-** இ1/1139/2018

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**